

முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்களை நேற்று முன்தினம் (11.6.2024) அண்ணா அறிவாலயத்தில், தமிழ் மாநில தேசிய லீக் கட்சியின் பொதுச் செயலாளர் திருப்பூர் அல்தாப் மற்றும் நிர்வாகிகள் சந்தித்து, நாடாளுமன்றத் தேர்தலில் திராவிட முன்னேற்றக் கழக கூட்டணி 40–க்கு 40 தொகுதிகளிலும் மாபெரும் வெற்றி பெற்றதையொட்டி வாழ்த்துத் தெரிவித்தனர்.

# அவ்வையார் விருது பெற்ற தனித்துவ எழுத்தாளர் ஃபாஸ்டினா சூசைராஜ் (எ) பாமா போன்ற புதிய பெண் எழுத்தாளர்கள் இலக்கிய உலகில் அறிமுகம் ஆக வேண்டும்!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் பாராட்டு!

**சென்னை, ஜீன் 13-**

**தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் 2024ஆம் ஆண்டிற்கான ஔவையார் விருது பெற்ற திருமிகு ஃபாஸ்டினா சூசைராஜ் (எ) பாமா அவர்களை வாழ்த்தி சமூக வலைதளங்களில் வெளியிட்டுள்ள பதிவு வருமாறு:**

ஒரு சமூகம் எந்தளவுக்கு முற்போக்காகத் திகழ்கிறது என்பதை, அந்தச் சமூகம் எழுத்தாளர்களைக் கொண்டாடுவதைக் கொண்டு அளவிடலாம். எளிய மக்களின் வாழ்வியலைத் தங்களது எழுத்தின் வழியாக உணர்த்தி மாற்றங்களுக்கு வித்திடும் எழுத்தாளர்கள் போற்றுதலுக்குரியவர்கள்.

எழுத்தாளர் பாமா அவர்களை நாம் போற்றுவது காலத்தின் தேவையாகிறது. அவரது தாக்கம் புதிய பெண் எழுத்தாளர்களைத் தமிழ் இலக்கிய உலகிற்கு அறிமுகம் செய்ய வேண்டும்.


உடல்நிலை காரணமாகத் தாமதமாக அவர் இந்த ஔவையார் விருதை பெற்றுக்கொண்டிருக்கிறார். அந்த விருதை நான் வழங்கியபோது அடைந்த மகிழ்ச்சிக்கு எல்லையில்லை!

அவர் இன்னும் நிறைய எழுத வேண்டும்! அவரது எழுத்துகள் இன்னும் பலரை எழுதத் தூண்ட வேண்டும்!

சாதி, மதம், பாலினம், இனம் எனப் பல்வேறு அடையாளங்களினூடே ஒடுக்கு முறையின் அரசியலை அழுத்தமாகப் பேசும் 'கருக்கு' எனும் தன்வரலாற்றுப் புதினத்தின் வழியாக உலக அளவில் கவனம் ஈர்த்த எழுத்தாளர் பாமா (எ) பாஸ்டினா சூசைராஜ் அவர்கள் தமிழ்நாடு அரசின் இந்த ஆண்டுக்கான ஔவையார் விருதைப் பெறுகிறார்.

மரபுகளை உடைக்கும் தனித்துவமான எழுத்துநடையால் தமிழிலக்கியத்துக்குப் பங்காற்றி, இந்த விருதுக்குத் தேர்வாகி இருக்கும் அவருக்கு எனது நெஞ்சம் நிறைந்த வாழ்த்துகள்!

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் குறிப்பிட்டுள்ளார்.



சென்னை தெற்கு மாவட்டக் கழகப் பொருளாளர் வேளச்சேரி எஸ்.பாஸ்கரனின் மகன் பா.தருண்ராஜ் – அ.சுஷ்மிதா இணையரின் திருமண வரவேற்பு விழா சென்னை நீலாங்கரையில் நேற்று முன்தினம் நடைபெற்றது. இதில் கழக இளைஞர் அணிச் செயலாளர் – அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் பங்கேற்று மணமக்கள் இருவரும் பெரியாரும் சுயமரியாதையும் போல நல்வாழ்வு வாழ வாழ்த்தினார். உடன் அமைச்சர் மா.சுப்பிரமணியன் உள்ளிட்ட கழக நிர்வாகிகள் உள்ளனர்.

### கோவை – தி.மு.க. முப்பெரும் விழா!

# திருவண்ணாமலை தெற்கு மாவட்டத்தினர் ஜீன் 15-ல் அலைகடலென அணிவகுப்பீர்!

## மாவட்டச் செயலாளர் அமைச்சர் எ.வ.வேலு அறிக்கை!

சென்னை, ஜூன் 13 -

ஜூன் 15 அன்று கோவையில் நடைபெறும் தி.மு.க. முப்பெரும் விழாவிற்கு, திருவண்ணாமலை தெற்கு, வடக்கு மாவட்டக் கழக நிர்வாகிகள், தோழர்கள் அலைகடலென திரள்வீர் என பொதுப்பணித்துறை அமைச்சர் எ.வ.வேலு அறிக்கை விடுத்துள்ளார்.



இது குறித்து கழக உயர்நிலை செயல்திட்டக் குழு உறுப்பினரும், பொதுப்பணித்துறை அமைச்சருமான எ.வ.வேலு விடுத்துள்ள அறிக்கை வருமாறு:

கழகத் தலைவரும், முதலமைச்சருமான மு.க. ஸ்டாலின் அவர்களின் தலைமையில் கடந்த ஜூன் 8ஆம் தேதியில் சென்னை அண்ணா அறிவாலயத்தில் நடைபெற்ற தி.மு.க. நாடாளுமன்ற உறுப்பினர்கள் கூட்டத்தில், நிறை வேற்றப்பட்ட தீர்மானத்தின் படி தமிழினத் தலைவர் கலைஞரின் நூற்றாண்டு நிறைவு விழா - 40 நாடாளுமன்றத் தொகுதிகளிலும் வெற்றி அளித்த தமிழ்நாட்டு மக்களுக்கு நன்றி தெரிவிக்கும் விழா - சீர் மிகு வெற்றிக்கு கழகத்தை வழிநடத்தி சென்ற கழக தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்களுக்கு பாராட்டு விழா என முப்பெரும் விழா அறிவிக்கப்பட்டது.

ஜூன் 15 சனிக்கிழமை அன்று கோவை, கொடிசியா மைதானத்தில் நடைபெறவுள்ள விழாவில், கழக தலைவர் மு.க. ஸ்டாலின் அவர்கள் தலைமையில் கூட்டணி கட்சி தலைவர்கள் மற்றும் வெற்றி பெற்ற 40 நாடாளுமன்ற உறுப்பினர்களும் கலந்துகொள்கிறார்கள்.

ஏனவே திருவண்ணாமலை தெற்கு, வடக்கு மாவட்டக் கழக நிர்வாகிகள், ஒன்றிய நகர பேரூர் கழக நிர்வாகிகள், அணிகளின் நிர்வாகிகள், உள்ளாட்சி அமைப்பின் நிர்வாகிகள், கிளை மற்றும் வட்டக் கழக நிர்வாகிகள் மற்றும் கழக முன்னோடிகள் அலைகடலெனக திரண்டுவந்து, கோவை முப்பெரும் விழாவினை சிறப்பித்திட கேட்டுக் கொள்கிறேன்.

இவ்வாறு அறிக்கையில் கூறியுள்ளார்.

### முத்தமிழறிஞர் கலைஞர் 101வது பிறந்தநாள் விழா!

# நெல்லை மாநகர தி.மு.க. வழக்கறிஞர் அணி சார்பில் இலவச மருத்துவ முகாம்!

## சு.சுப்பிரமணியன் துவக்கி வைத்தார்!

நெல்லை.ஜூன்.13.

நெல்லை மாநகர தி.மு.க.சார்பில் முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் 101 பிறந்தநாளை முன்னிட்டு தொடர் 101 நிகழ்ச்சிகள் நடைபெற்று வருகிறது.அதன்படி மாநகர வழக்கறிஞர் அணி சார்பில் நடைபெற்ற இலவச மருத்துவ முகாமினை மாநகர செயலாளர் சு. சுப்பிரமணியன் துவக்கி வைத்தார்.

முதலமைச்சர் - கழகத் தலைவர் அவர்களின் ஆணைக்கிணங்க கழக இளைஞர் அணி செயலாளரும் இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சருமான உதயநிதி ஸ்டாலின் அவர்களின் வழிகாட்டுதலின்படி நிதி மற்றும் மனிதவள மேலாண்மை துறை அமைச்சர் தங்கம் தென்னரசு அறிவுறுத்தலின்படி நெல்லை மாநகர தி.மு.க.சார்பில் கலைஞர் அவர்களின் 101வது பிறந்தநாள் தொடர் 101 நிகழ்வாக வெகு சிறப்பாக நடைபெற்று வருகிறது.

இதன் மூலம் ஏழை, எளிய மக்கள் பெரும் அளவில் பயன் பெற்றுள்ளனர்.

அதன்படி மாநகர வழக்கறிஞர் அணி மற்றும் அன்பு அறக்கட்டளை இணைந்து பாளை நீதிமன்றம் எதிரில் இலவச மருத்துவ முகாம் பாளை பகுதி செயலாளர் அன்டன் செல்லதுரை தலைமையில் மாநகர வழக்கறிஞர் அணி அமைப்பாளர் சுரேஷ் குமார், வழக்கறிஞர் அணி தலைவர் ஜாகிர் உசேன் ஆகியோர் முன்னிலையில் நடைபெற்றது. இந்நிகழ்வில் மாநகர செயலாளர் சு.சுப்பிரமணியன் பங்கேற்று இலவச மருத்துவ முகாமை துவக்கி வைத்தார்.

நிகழ்வில் மாநகர இளைஞரணி துணை அமைப்பாளர் அலிஃப்மீரான், மாவட்ட பிரதிநிதி வேங்கை வெங்கடேஷ், மாநகர வழக்கறிஞர் அணி வழக்கறிஞர்கள் சண்முகசுந்தர், இனியன்,செந்தில் குமார், ஜெயபிரபா, சங்கீதா, மாலதி, அசோக், ராஜா, சூர்யா, மாரிமுத்து, சுப்பிரமணியன், இந்துமதி, தாமிர கணேசன், சுரேஷ், தச்சை பகுதி துணைச் செயலாளர் ஸ்டார் முருகன், வட்டச் செயலாளர் செல்லையா, ராஜ், கேபிள் குமரேசன், மாநகர நிர்வாகிகள் ஷெட்டி, மகாராஜன், எல்.ஐ.சி பேச்சிமுத்து, செந்தில்குமார், கணேச பெருமாள், சுப்ரித் சுப்பிரமணியன், அந்தோணிராஜ், சார்லஸ் முத்துராஜ், வினோத், கோபாலகிருஷ்ணன், சங்கர், கிருஷ்ணகுமார், முத்து சுப்பிரமணியன், உமர், மைக் மணி,குணா, கிருஷ்ணன், மணி, பத்மா, சௌந்தரம் முத்துராஜ், மேரி, பிந்து செய்யது, ராஜேஸ்வரி, ஆனி, நர்மதா, சித்ரா,சங்கர் கணேஷ், முருகன், மில் ஜே.குமார், ராஜா அப்பாஸ், சாதிக், பாபநாசம், அன்னராஜா, ஐயப்பன், கார்த்திக் உள்பட கழக நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர். நிகழ்ச்சி ஏற்பாடுகளை வழக்கறிஞர் அருள்மாணிக்கம் செய்திருந்தார்.

### சென்னை குடிநீர் வாரிய தலைமை அலுவலகத்தில்

# தூய்மைப் பணியாளர்களின் நலன் குறித்த ஆய்வுக் கூட்டம்!

## ஆணையத் தலைவர் எம்.வெங்கடேசன் தலைமையில் நடைபெற்றது!

சென்னை, ஜீன் 13–

தேசிய தூய்மைப் பணியாளர் ஆணையத் தலைவர் எம். வெங்கடேசன் தலைமையில் தூய்மைப் பணியாளர்களின் நலன் குறித்த ஆய்வுக் கூட்டம் சென்னைப் பெருநகர் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவு நீரகற்று வாரியத்தின் தலைமை அலுவலகத்தில் நேற்று முன்தினம் (11.06.2024) நடைபெற்றது.

நேற்று முன்தினம் (11.06.2024) தேசிய தூய்மைப் பணியாளர் ஆணையத் தலைவர் எம். வெங்கடேசன் அவர்களின் தலைமையில் தூய்மைப் பணியாளர்களின் நலன் குறித்த ஆய்வுக் கூட்டம் சென்னைப் பெருநகர் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவு நீரகற்று வாரியத்தின் தலைமை அலுவலகத்தில் நடைபெற்றது.

இக்கூட்டத்தில், தேசிய தூய்மைப் பணியாளர் ஆணையத் தலைவர் பேசியதாவது:–

மனிதக் கழிவுகளை அகற்றும் தொழில் புரிவோர் தடுப்பு மற்றும் அவர்களது மறுவாழ்வு சட்டம் 2013, பிரிவு 7ன்படி, எந்தவொரு நபரும், ஒப்பந்ததாரரும் அல்லது எந்தவொரு நிறுவனமும் நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ எந்தவொரு நபரையும் அபாயகரமான முறையில் கழிவுநீர் தொட்டியை சுத்தம் செய்வதற்கு ஈடுபடுத்தவோ அல்லது பணியமர்த்தவோ கூடாது. அவ்வாறு ஈடுபடுத்தினால், அந்த நபரின் மீது மேற்படி சட்டத்தின் பிரிவு 9ன்படி முதன் முறையாக மீறுபவர்களுக்கு 2 ஆண்டுகள் சிறைத்தண்டனை அல்லது 2 லட்சம் ரூபாய் அபராதம் அல்லது இரண்டும் தண்டனையாக விதிக்கப் படும். இரண்டாவது முறையாக மீறுபவர்களுக்கு 5 ஆண்டுகள் சிறைத்தண்டனை அல்லது 5 லட்சம் ரூபாய் அபராதம் அல்லது இரண்டும் சேர்த்து விதிக்கப்படும் என தெரிவிக்கப்பட்டுள்ளது. இது தொடர்பான விழிப்புணர்வுப் பணிகள் அனைத்து பகுதிகளிலும் மேற்கொள்ளப்பட வேண்டும்.

அனைத்து களப்பணியாளர்களையும் பாதுகாப்பு உபகரணங்களை பயன்படுத்தும் நிலையினை உறுதி செய்து களப்பணியாளர்களின் நலனில் அக்கறையோடு இருக்க வேண்டும். மேலும், தூய்மைப் பணியாளர்களுக்கு வழங்க வேண்டிய ஊதியத்தை ஒவ்வொரு ஆண்டும் அதிகரித்து வழங்கிட வேண்டும். அனைத்து பணியாளர்களையும் காப்பீட்டு திட்டத்தில் சேர்ப்பதற்கான நடவடிக்கையை மேற்கொள்ள வேண்டுமென தெரிவித்தார்.



சென்னை, இராஜா அண்ணாமலை மன்றத்தில் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு நிறைவு விழாவை முன்னிட்டு, நேற்று முன்தினம் (11.6.2024) தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் நல்வழிகாட்டுதலின்படி, இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு ஏற்பாட்டில் திறந்து வைக்கப்பட்டுள்ள "காலம் உள்ளவரை கலைஞர்" நவீன தமிழகத்தின் சிற்பிக்கு வரலாற்று சிறப்புமிக்க நவீன கண்காட்சியகத்தை நிதி, மின்சாரம் மற்றும் மனிதவள மேலாண்மைத்துறை அமைச்சர் தங்கம் தென்னரசு மற்றும் சட்டப்பேரவை துணைத்தலைவர் கு.பிச்சாண்டி ஆகியோர் நேரில் சென்று பார்வையிட்டனர்.

### தென்காசி தெற்கு மாவட்டக் கழகத்தினர் பெருந்திரளாக கலந்து கொள்வீர் !

# ஜீன் 15ஆம் தேதி கோவையில் முப்பெரும் விழா!

## மாவட்டக் கழகப் பொறுப்பாளர் வே.ஜெயபாலன் வேண்டுகோள் !

தென்காசி.ஜூன்.13.

ஜூன் 15ஆம் தேதி கோயமுத்தூர் கொடிசியா மைதானத்தில் முதலமைச்சர் கழகத் தலைவர் அவர்களின் தலைமையில் மற்றும் கூட்டணி கட்சித் தலைவர்கள் கலந்து கொள்ளும் "முப்பெரும் விழா பொதுக்கூட்டத்தில்"தென்காசி தெற்கு மாவட்ட தி.மு.க.சார்பில் கழக நிர்வாகிகள் மற்றும் கழகத் தோழர்கள் பெரும் திரளாக கலந்து கொள்ள வேண்டும் என தென்காசி தெற்கு மாவட்ட தி.மு.க.பொறுப்பாளர் வே.ஜெயபாலன் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

அது பற்றிய விவரம் வருமாறு.

வருகிற ஜூன் 15ஆம் தேதி மாலை 400 மணி அளவில் கோயமுத்தூர் கொடிசியா மைதானத்தில் வெற்றி நாயகன் தமிழ்நாடு முதலமைச்சர் கழகத் தலைவர் அவர்களின் தலைமையிலும் மற்றும் கூட்டணி கட்சி தலைவர்கள் கலந்து கொள்ளும் முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு நிறைவு விழா,40 நாடாளுமன்ற தொகுதிகளிலும் வெற்றியளித்த தமிழ்நாட்டு மக்களுக்கு நன்றி தெரிவிக்கும் விழா,சீர்மிகு வெற்றிக்கு தமிழ்நாட்டை வழிநடத்திச் செல்லும் தமிழ்நாடு முதலமைச்சர் கழகத் தலைவர் அவர்களுக்கு பாராட்டு விழா, என நடைபெறும் "முப்பெரும் விழா" பொதுக்கூட்டத்தில் தென்காசி தெற்கு மாவட்ட தி.மு.க.சார்பில் பெருந்திரளாக கலந்து கொள்ள வேண்டும்.

இந்நிகழ்வில் தென்காசி தெற்கு மாவட்டத்தை சேர்ந்த மாநில, மாவட்டக் கழக நிர்வாகிகள், தலைமைச் செயற்குழு பொதுக்குழு உறுப்பினர்கள், ஒன்றிய, நகர, பேரூர், கிளை, வார்டு கழகச் செயலாளர்கள் மற்றும் நிர்வாகிகள், ஒன்றிய குழு தலைவர்கள்,நகர்மன்ற தலைவர்கள்,பேரூராட்சி மன்றத் தலைவர்கள், ஊராட்சி மன்ற தலைவர்கள்,மாவட்ட ஊராட்சி குழு, ஒன்றிய குழு உறுப்பினர்கள்,பேரூராட்சி மன்ற உறுப்பினர்கள், முன்னாள், இந்நாள் உள்ளாட்சி பிரதிநிதிகள், மாவட்ட, ஒன்றிய, நகர, பேரூர், கழக அணிகளின் அமைப்பாளர்கள்,துணை அமைப்பாளர்கள்,வாக்குச்சாவடி முகவர்கள் மற்றும் கழக முன்னோடிகள் கழகத் தோழர்கள் அனைவரும் பெரும் திரளாக கலந்து கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறேன்.



இவ்வாறு தென்காசி தெற்கு மாவட்ட தி.மு.க.பொறுப்பாளர் வே.ஜெயபாலன் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

### திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

## தஞ்சை ந. பூபதி

ஜூன் 13 (2006)



தஞ்சை நகரக் கழக முன்னோடிகளில் ஒருவராக திகழ்ந்தவர்.

தஞ்சை நகரக் கழகப் பொறுப்பாளர், பொதுக்குழு உறுப்பினர், நகர்மன்றத் துணைத் தலைவர் உள்ளிட்ட பொறுப்புகளை வகித்தவர்.

தலைவர் கலைஞர் இடும் கட்டளை எதுவானாலும் அதை அப்படியே ஏற்றுக் கொள்ளக்கூடியவர்.

கழகம் அறிவித்த அறப்போராட்டங்களில் பங்கேற்று சிறை சென்றவர்.

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**